**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 32/2020**

**Deposition of Witness for : PW 2**

**Name** : திரு. பட்டுசாமி
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16-06-2023.**

**(All Accused absent)**

**முதல் விசாரணை** -

நான் தற்போது திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு செங்கம் வட்டாட்சியர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணியில் இருந்த போது 24.7.2018 அன்று மணல் திருட்டு சம்மந்தமாக தாசில்தாருடன், நான், கிராம உதவியாளர் பச்சையப்பன், கிராம உதவியாளர் கோபிநாத் ஆகியோர் காஞ்சி - திருவண்ணாமலை ரோடில் காகா ஆசிரமம் அருகில் தணிக்கையில் இருந்த போது ஒரு டிப்பர் லாரி வந்தது. அதனை நிறுத்தி ஆவணங்களை கேட்டோம். லாரியில் 2 யூனிட் மணல் இருந்ததால் ரசீது கேட்டோம். அந்த லாரியின் டிரைவர் விஜயகாந்த் என்று சொன்னார். விஜயகாந்த் எங்களை அசிங்கமாக திட்டி லாரியை நிறுத்தாமல் ஓவர் டேக் செய்து சென்றார். நாங்கள் பொலிரோ வாகனத்தில் பின்தொடர்ந்து அவர்களை தடுத்து நிறுத்தினோம். லாரியை நாங்கள் பிடித்து விட்டோம். டிரைவர் இறங்கி ஓடிவிட்டார். அவரை பார்த்தால் அடையாளம் காட்டுவேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

காகா ஆஸ்சிரமம் அருகே வாகன தணிக்கையின் போது டிரைவர் லாரியை நிறுத்தினார். நாங்கள் ரோடில் நின்று கொண்டு லாரியில் என்ன உள்ளது என்று விசாரித்தோம். லாரியில் என்ன உள்ளது என்று நான் ஏறி பார்க்கவில்லை. நானும், கிராம உதவியாளரும் தணிக்கையின் போது தாசில்தாருடன் செல்லவில்லை

என்றும், தற்போது தாசில்தாருக்கு பவ்யப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. லாரியை நிறுத்தாமல் சென்றதாகவும், பிறகு நாங்கள் அவர்களை விரட்டி பிடித்ததாகவும், எங்கள் வாகனத்தை அவர்கள் சேதப்படுத்திய விவரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

நாங்கள் அடித்தால் லாரி டிரைவர் விஜயகாந்திற்கு காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்றால் சரியல்ல. தாசில்தார் அவருடைய உறவினரை வைத்து தணிக்கைக்கு சென்றார் என்றும், அன்றைய தினம் நாங்கள் யாரும் தணிக்கைக்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கு பிறகு எங்கள் தாசில்தார் கையூட்டு பெற்றதாக அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்டார் என்றால் நான் மாவட்ட ஆட்சியர் அலுவகத்திற்கு 2020ல் மாற்றலாகி வந்து விட்டேன். என் உயர் அதிகாரி வட்டாட்சியர் அவர்களுக்கு கட்டுப்பட்டு தவறான சங்கதிகளை சொல்கிறேன் என்றால் சரியல்ல. அன்றைய தினம் லாரியின் மணல் ஏற்றிவரவில்லை என்றும் எம்-சான்ட் ஏற்றி வரப்பட்டது என்றால் சரியல்ல.

தாசில்தார் மணல் என்று டிரைவரை அடித்து காயப்படுத்தியதால் டிரைவர் சட்ட நடவடிக்கை எடுப்பார் என்று பயந்து தவறாக அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/- பட்டுசாமி

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.